விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 29 செவ்வாய் 13.07.2021 மலர் - 2, இதழ் - 98

# மீளும் பாரத பொருளாதாரம்

கொரோனா 2வது அலை காரணமாக முன்னெடுக்கப்பட்ட ஊரடங்கு கட்டுப்பாடுகள் தற்போது தளர்த்தப்பட்டுள்ளன. இதனால் முடங்கிய பொருளாதாரம் விரைவாக மீண்டு வருவதாக இந்தியத் தொழிலகக் கூட்டமைப்பு (சி.ஐ.ஐ) நடத்திய ஆய்வு தெரிவிக்கிறது. தொழில் துறையைச் சேர்ந்த 60 சதவீத தலைமைச் செயல் அதிகாரிகள், கொரோனா முதல் அலை பாதிப்பைவிட 2வது அலையில் விரைவான மீட்சி தெரிவதாகக் கூறியுள்ளனர். நுகர்வோர் நடவடிக்கை அதிகரித்துள்ளதால் பொருட்கள் விற்பனை அதிகரித்து வருகிறது. 2வது அலையால் முடங்கிப் போன தொழில் நடவடிக்கைகளில் தற்போது 60% அளவுக்கு முன்னேறியுள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், ஏற்றுமதி பெரிதாக பாதிக்கப்படவில்லை என்று 81% ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விஜயபாரதம்

CII Confederation of Indian Industry



விஜயபாரதம்

# வி.ஹெச்.பி கோரிக்கை

விஷ்வ ஹிந்து பரிஷத் பூஜாரிகள் பேரமைப்பு சார்பாக கிராம கோவில் பூசாரிகளுக்கு ஊக்கத்தொகை, ஓய்வூதியம், பூசாரிகள் நல வாரியம், பூசாரிகளுக்கு இலவச வீடு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. இதில் வி.ஹெச். பி கோட்ட பொறுப்பாளர், பூசாரிகள் பேரமைப்பு மாவட்ட தலைவர், உள்ளிட்ட பல்வேறு பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# சேவாபாரதி அழைப்பு

விஜயபாரதம்

கொரோனா 3வது அலையை எதிர்கொள்வதற்கான சேவையில் ஆர்வம் உள்ளவர்கள் சேவாபாரதியுடன் இணைந்து சேவை செய்ய, சேவாபாரதி அழைப்பு விடுத்துள்ளது. 3வது அலை வரும்பட்சத்தில், குழந்தைகளை பாதுகாத்தல், பெற்றோருக்கு விழிப்புணர்வு, பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு கல்லூரிவரை படிக்க ஆதரவு, ஆன்லைன் வழியாக படிக்க முடியாத குழந்தைகளுக்கு டியூஷன், வயதானவர்களுக்கு உதவி என பல்வேறு சேவைகளை சேவாபாரதி வழங்க உள்ளது. படித்தவர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், உதவும் மனம் கொண்டோர் என அனைவரும் இதில் இணையலாம். ஆர்வம் உள்ளவர்கள் 86084 15240 / 81229 46472 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என சேவாபாரதி (தென் தமிழகம்) மாநிலத்தலைவர் ராமநாதன் தெரிவித்துள்ளார்.

# கோயில் குளம் ஆக்கிரமிப்பு அகற்றம்



(தொடர்மழையிலும் நிரம்பாத புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் கோயில் தெப்பக்குளம்)

விஜயபாரதம்

கடலூர், திட்டக்குடி வைத்தியநாத சுவாமி கோயிலுக்கு எதிரில் சுமார் 3,400 சதுர மீட்டர் பரப்பளவில் திருக்குளம் உள்ளது. இக்குளம், 60 ஆண்டுகளுக்கும் மேலாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. கடந்த 2018ல், குளத்தின் தெற்கு, கிழக்கு, மேற்கு பகுதி ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. எனினும், வடக்குப் பகுதி ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை. இந்நிலையில், ஹிந்து அறநிலையத்துறை அதிகாரிகள், காவல்துறையினர் உதவியுடன் எடுத்த அதிரடி நடவடிக்கை காரணமாக அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. இதனால், பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அரசுக்கு கோரிக்கை: இதுபோல பல்வேறு கோயில்களின் குளங்கள் ஆக்கிரமிப்பில் உள்ளன. சில கோயில் குளங்களுக்கு மழைநீர் வரமுடியாத வண்ணம் சுற்றிலும் கடைகள், வீடுகள் என ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால், மழைக் காலத்திலும்கூட அவை வரண்டுள்ளன. இதன் காரணமாக, கோயில் மற்றும் சுற்றுப்புற நீராதாரங்களும் அதள பாதாளத்துக்கு சென்றுவிட்டன. நீர்நிலை ஆக்கிரமிப்புகளும் கோயில் நில ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட வேண்டும் என ஏற்கனவே நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. இவ்வித ஆக்கிரமிப்புகள் நீர் நிலை மற்றும் கோயில் நில ஆக்கிரமிப்பு என ஒன்று சேர்ந்த ஆக்கிரமிப்பு என்பதால் இதில் அறநிலையத்துறையும் தமிழக அரசும் உடனடியாக கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். வரும் மழைக்காலத்துக்கு முன்பு இது போன்ற ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டால் மழைநீரை தேக்கி மக்களின் தண்ணீர் பிரச்சனையை போக்க முடியும்.

# கர்நாடக கவர்னர் ஆனார் கெலாட்



விஜயபாரதம்

பா.ஜ.கவின் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான தாவர்சந்த் கெலாட், கர்நாடக மாநிலத்தின் 19வது கவர்னராக பதவியேற்றார். கர்நாடக உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அபய் ஸ்ரீனிவாஸ் ஓகா, கவர்னர் தாவர்சந்த் கெலாட்டுக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். முதல்வர் எடியூரப்பா, முன்னாள் கவர்னர் வஜூபாய் வாலா, சபாநாயகர், தலைமைச் செயலர், எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

# கோயிலில் குளம் ஆக்கிரமிப்பு


விஜயபாரதம்

சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில் பகுதியை சேர்ந்த சேகர் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், 'உலகப் புகழ் பெற்ற வைத்தீஸ்வரன் கோயிலைச் சுற்றி, நீரை சேகரிக்கவும், நிலத்தடி நீரை பாதுகாக்கவும் ஏராளமான குளங்கள் வெட்டப்பட்டுள்ளது. கோயில் யானைகளை குளிப்பாட்ட, 4 ஏக்கர் பரப்பில் வெட்டப்பட்ட யானை குளத்தில், தற்போது 3 ஏக்கர்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்புக்களை அகற்றக் கோரி பலமுறை அதிகாரிகளுக்கும், முதல்வரின் தனிப் பிரிவுக்கும் புகார் மனுக்கள் அனுப்பியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இந்த ஆக்கிரமிப்புக்களை அகற்ற அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என கோரிக்கை விடுத்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் அமர்வு, 'மனுதாரரின் கோரிக்கை மனுவை எட்டு வாரங்களில் பரிசீலித்து தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும். ஆக்கிரமிப்புக்கள் கண்டறியப்பட்டால் சட்டப்படி அவற்றை அகற்ற வேண்டும் 'என, தமிழக அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் உத்தரவிட்டது.


# ஆர்.எஸ்.எஸ். சிறப்பு பயிற்சி


விஜயபாரதம்

பிரதம பாரதத்தில் கொரோனா 3வது அலையும் தாக்கக்கூடும் என மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அதனால் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படலாம் என கூறப்படுகிறது. அப்படி 3வது அலை ஏற்பட்டால் அப்போது மக்களுக்கு உதவுவதற்காக ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அதன் தொண்டர்களுக்கு சிறப்பு பயிற்சி முகாம் ஒன்றை நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. அதன்படி, 'நாடு முழுவதும் நடைபெறும் இந்த முகாம் ஆகஸ்டு 1ல் சில பகுதிகளில் தொடங்கும். அடுத்த சில நாட்களில் பிற பகுதிகளிலும் நடத்தப்பட்டு, அடுத்த மாத இறுதிக்குள் இந்த பயிற்சி முடிக்கப்படும். இதில் கொரோனாவில் சிக்கியுள்ள தாய்மார்கள், குழந்தைகளுக்கு உதவுவது தொடர்பாகவும், பெருந்தொற்று நேரத்தில் மாவட்ட நிர்வாகங்களுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பாகவும் பயிற்சி வழங்கப்படும்' என ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அகில பாரதிய பிரசார் பிரமுக் சுனில் அம்பேத்கர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

# படத்திற்கு தடை கோரும் ஹிந்து தமிழர் கட்சி

ஹிந்து தமிழர் கட்சி தலைவர் ராம ரவிகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'விஜயமுருகன் தயாரித்து, இயக்கி உள்ள 'ஜகா' என்ற திரைப்படத்தின் 'பர்ஸ்ட்லுக்' போஸ்டரில் கொரோனா தொற்று சமயத்தில் கோயில்கள் எல்லாம் மூடப்பட்டு, கடவுள் சிவபெருமான் முக கவசம் அணிந்து, ஆக்சிஜன் சிலிண்டரில் இருந்து சுவாசிப்பது போன்ற படத்தை வெளியிட்டு ஹிந்து மத நம்பிக்கையை அவமதிப்பது கண்டத்துக்குரியது. கருத்து சுதந்திரம் என்ற பெயரில், ஹிந்து மத கடவுள்களை மட்டுமின்றி, எந்த மத கடவுள்களை அவமதிக்கும் விஷயங்களை அனுமதிக்கக் கூடாது. போஸ்டரை தடை செய்ய வேண்டும்' என்று கூறியுள்ளார். என்வே, படத்தில் சிவபெருமான் உருவகப்படுத்தப்பட்டுள்ளாரா அல்லது அது ஒரு சிவ யோகியா, இந்த போஸ்டர் வெளியிட்டதன் பின்னணி என்ன என்பதை படக்குழுவினர் உடனடியாகத் தெரிவித்து அனைவரின் சந்தேகத்தையும் போக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.



விஜயபாரதம்

# முன்பதிவு மீண்டும் தொடக்கம்


விஜயபாரதம்

கொரோனா தடுப்பூசி மருந்துகள் கையிருப்பு இல்லாததால் கடந்த வாரம் பெரும்பாலான நாட்களில் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்படவில்லை. இதனால், தடுப்பூசி போட்டுக்கொள்ள gccvaccine.in என்ற இணையதள முன்பதிவு சேவை நிறுத்தப்பட்டது. இந்நிலையில் அரசு சுகாதாரத் துறை சார்பில் சென்னை மாநகராட்சிக்கு சுமார் 45 ஆயிரம் டோஸ் தடுப்பூசி மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து முகாம் நடைபெறும். இணையதள முன்பதிவும் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி தெரிவித்துள்ளார். ஒரு மையத்துக்கு ஒதுக்கப்படும் மொத்த தடுப்பூசி மருந்துகளில் 3ல் ஒரு பங்குக்கு மட்டுமே இணையதள முன்பதிவு அனுமதிக்கப்படும். மீதமுள்ள 2 பங்கு தடுப்பூசிகள் நேரில் வருவோருக்கு போடப்படும் என்று மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# புதுப்பிக்கப்படும் சூரியனார் கோயில்



விஜயபாரதம்

உத்தரபிரதேசம், பிரதாப்கர் மாவட்டத்தில் அமைந்துள்ள 8ம் நூற்றாண்டை சேர்ந்த ஒரு பண்டைய கால சூரியநார் கோயில் சிதிலமடைந்த நிலையில் கடந்த 2011ல் அக்கிராம மக்கள் கண்டறிந்து அரசுக்கு தெரிவித்தனர். அங்கு தொல்பொருள் ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஆனால், பிறகு அது கண்டுகொள்ளாமல் விடப்பட்டது. இதனால், அந்த கிராம மக்கள் ஒன்றிணைந்து 'பைஹரன் நாத் தாம் க்ஷேத்ரிய விகாஸ் சன்ஸ்தான்' என்ற அமைப்பை உருவாக்கி சிதிலமடைந்த அக்கோயிலை பாதுகாத்து வந்தனர்.

இந்நிலையில், தற்போது. அந்த ஆலயத்தை புதுப்பிக்க யோகி ஆதித்யநாத் தலைமையிலான உத்தரபிரதேச அரசு உத்தரவிட்டுள்ளது. இதனையடுத்து அங்கு விரைந்த அதிகாரிகள் அக்கோயிலை பார்வையிட்டனர். பிறகு, இதனை விரைவில் மறு உருவாக்கம் செய்து, மக்கள் வந்து செல்லும் வகையில் புனித யாத்திரை தலமாக மாற்ற உள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அசாமில் பயங்கரவாதி சுட்டுக்கொலை



விஜயபாரதம்

ஐக்கிய மக்கள் புரட்சிகர முன்னணி என்ற அசாமைச் சேர்ந்த பயங்கரவாத இயக்கத்தின் தலைமைத் தளபதி மங்கின் கல்ஹாவ், அந்த அமைப்பினராலேயே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான். முன்னதாக, அதன் தளபதி மார்ட்டின் கைட் கடந்த அக்டோபரில் சிங்காசன் மலையில், என்கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்டான். இதனால், அந்த அமைப்பு சரணடைய முடிவு செய்தது. அது குறித்து அப்போதைய அசாம் முதல்வர் சர்பானந்த சோனோவாலுக்கு அவ்வமைப்பினர் கடிதம் எழுதியிருந்தனர் ஆனால் சரணடையவில்லை என்பதும் சீனா இந்த பயங்கரவாத கும்பலுக்கு துப்பாக்கி உள்ளிட்டவற்றை வழங்கி ஊக்குவித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவனது கும்பல் மரங்களை வெட்டி கடத்தி வந்ததால் அசாமின் வீரப்பன் எனவும் இவன் காவல்துறையால் அழைக்கப்பட்டான்.

# ஆயுர்வேத மாநாடு



விஜயபாரதம்

கடந்த ஆண்டு உலகளாவிய கொரோனா தொற்றுநோய் தாக்கம், கோடிக்கணக்கான மக்களை, முந்தைய சாதாரண வாழ்க்கை முறையில் இருந்து மாற்றியுள்ளது. பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த நமது பாரம்பரிய மருத்துவங்களான ஆயுர்வேதம், சித்தா உள்ளிட்டவை இந்த கடுமையான சூழலில், உலக மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது என்றால் அது மிகை அல்ல. இந்நிலையில், கொரோனா மற்றும் கொரோனாவுக்கு பிந்தைய சிகிச்சைகள் அதற்கான நிலையான நெறிமுறைகளை குறித்து விவாதிக்க, கேரளாவைச் சேர்ந்த வைத்தியரத்தினம் குழு ஏற்பாடு செய்துள்ள இரண்டு நாள் மெய்நிகர் மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. இதில், நாடு முழுவதும் உள்ள ஆயுர்வேத மருத்துவர்கள், யோகா பயிற்சியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்கின்றனர். கொரோனா 3வது அலை ஏற்படலாம், அது குழந்தைகளை அதிகம் தாக்கலாம் என அஞ்சப்படும் சூழலில், இந்த மாநாடு முக்கியத்துவம் பெருகிறது.

# அறக்கட்டளைக்கு அவமதிப்பு நோட்டீஸ்



விஜயபாரதம்

சுராஜ் இந்திய அறக் கட்டளை என்ற தன்னார்வ தொண்டு அமைப்பு, உச்ச நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக 64 பொதுநல மனுக்களை செய்தது. இதற்கு கடந்த 2017ல் நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது. மேலும், நீதிமன்ற நேரத்தை வீணடித்ததற்காக ரூ. 25 லட்சம் அபராதம் விதித்தது. இந்த உத்தரவை மாற்றக்கோரிய மனு தள்ளுபடி செய்யப்பட்டது. கடந்த 2020ல் அந்த அமைப்பின் அசையும் அசைய சொத்து விவரங்களை நீதிமன்றம் கோரியது. ஆனால் அதற்கு அந்த அமைப்பு பதில் அளிக்கவில்லை. இதனையடுத்து, அதன் தலைவர் ராஜீவ் தியாவுக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. இதனை எதிர்த்து அவர் மனு தாக்கல் செய்தார். இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், அபராத வசூலை தடுப்பது, நேரத்தை வீணடிப்பது என தொடர்ந்து செயல்பட்டு நீதிமன்ற அவமதிப்பு செய்த அவரை ஏன் தண்டிக்ககூடாது என கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

# அமுல் வர்த்தக முத்திரை வழக்கு




விஜயபாரதம்

பாரதத்தின் மிகப்பெரிய பால், பால் பொருட்கள் பிராண்டான அமுல் டெய்ரி, கனடாவை சேர்ந்த சாந்து தாஸ், ஆகாஷ் கோஷ், மோஹித் ராணா, படேல் ஆகியோர், 'லிங்க்ட்இன்' சமூக வலைத்தளத்தில் 'அமுல் கனடா' என்ற பெயரில் ஒரு பக்கத்தை உருவாக்கி, தங்களை அமுல் நிறுவனத்தின் ஊழியர்களாக காட்டிக்கொண்டனர். மேலும் அக்குழுவினர் அமுல் நிறுவன முத்திரையையும் அனுமதியின்றி பயன்படுத்தினர். இந்த மோசடியை அறிந்த அமுல் நிறுவனம் வழக்குத் தொடுத்தது. இவ்வழக்கை விசாரித்த கனடாவின் அறிவுசார் சொத்து மேல்முறையீட்டு வாரியம், வர்த்தக காப்புரிமை மீறலுக்காக அமுலுக்கு ரூ. 19.59 லட்சம் இழப்பீடாக வழங்க உத்தரவிட்டது. இது குறித்து கருத்து தெரிவித்த அந்நிறுவனத் தலைவர் ஆர் எஸ் சோதி, "நாங்கள் எச்சரிக்கையாக இருந்ததால் இது சாத்தியமானது. இதுபோன்ற தீர்ப்புகள், உலக அளவில் அறிவு சார் திருட்டு, வர்த்தக காப்புரிமை மீறல்களை தடுக்கும்' என தெரிவித்தார்.

# கொல்கத்தாவில் பயங்கரவாதிகள் கைது

மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவின் மேற்குப் பகுதியில், சில மாதங்களாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துத் ஜமாத் உல் முஜாஹிதீன் அமைப்பை சேர்ந்த மூன்று பயங்கரவாதிகள் தங்கி இருந்தனர். இது குறித்த தகவல் கிடத்ததை அடுத்து அங்கு விரைந்த சிறப்பு அதிரடிப் படையினர், அவர்களை கைது செய்தனர். அவர்கள் எதற்காக அங்கு வந்தனர், எந்த சதித் திட்டத்திற்காக அங்கு தங்கினர், பின்புலம் என்ன என விசாரனை நடைபெற்று வருகிறது.



விஜயபாரதம்

# ஆயுதங்கள் பறிமுதல்




விஜயபாரதம்

ஜம்மு காஷ்மிர் காவல்துறையினரின், புர்மண்டல் மோர் என்ற இடத்தில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக வந்த ஒரு டிரக்கை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்தனர். அப்போது, அந்த வாகனத்தில் இருந்து ஒரு கைத்துப்பாக்கி மற்றும் இரண்டு கையெறி குண்டுகள் மீட்கப்பட்டன. அதன் ஓட்டுனரை விசாரித்தபோது அவர், புல்வாமாவில் வசிக்கும் முந்தாசிர் மன்சூர் என்பது தெரியவந்தது. மேலும், இந்த ஆயுதங்கள், எல்லை தாண்டி ட்ரோன் மூலம் அனுப்பப்பட்டன. அவற்றை காஷ்மீர் பள்ளத்தாக்குக்கு கொண்டு செல்லதான் பணிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# பட்ஜெட்டில் மக்கள்தொகை கொள்கை

அசாமில் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா தலைமையிலான அரசு, வரும் ஜூலை 16ம் தேதி பட்ஜெட் தாக்கல் செய்ய உள்ளது. இந்த பட்ஜெட் அமர்வில், அம்மாநில அரசு தனது மக்கள் தொகைக் கொள்கையையும் வெளியிடும். அதில், தன்னார்வ கருத்தடை உள்ளிட்ட நடவடிக்கைகள், மக்கள்தொகை கொள்கை தொடர்பான சில முக்கிய அறிவிப்புகள் இடம் பெறும் என்று முதல்வர் கூறியுள்ளார். முன்னதாக, முதல்வர் சுமார் 150 முஸ்லீம் அறிஞர்களை சந்தித்து மக்கள் தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தார். இரண்டுக்கும் மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட தம்பதிகள் அரசு வேலைகளில் நுழைவதை அசாம் அரசு ஏற்கனவே தடை செய்துள்ளது. முந்தைய பா.ஜ.க அரசில் சுகாதார அமைச்சராக இருந்த தற்போதைய முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, வளர்ந்து வரும் மக்கள் தொகையின் ஆபத்து குறித்து தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறார்.



விஜயபாரதம்

# தடுப்பூசி போடாவிட்டால் வேலையில்லை

ஒரு சில நாடுகள் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள மக்களை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு சலுகைகளை அறிவிக்கின்றன. சில நாடுகள் கடுமையான கட்டுப்பாடுகள் மூலம் மக்களை தடுப்பூசி போடுவதற்கு வற்புறுத்தி வருகிறது. அவ்வகையில் தென் பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவு நாடான பிஜியின் பிரதமர் பிராங்க் பைனிமராமா, கொரோனா தடுப்பூசி போடாவிட்டால், அரசு வேலை இல்லை. தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்கள் தங்கள் வேலையை இழக்க நேரிடும். ஆகஸ்ட் 15ம் தேதிக்குள் தடுப்பூசியின் முதல் டோசை செலுத்திக்கொள்ளாத அரசு ஊழியர்கள் கட்டாய விடுப்பில் அனுப்பப்படுவார்கள். நவம்பர் 1ம் தேதிக்குள் இரண்டாவது டோஸ் செலுத்தப்படாவிட்டால், பணிநீக்கம் செய்யப்படுவார்கள்' என தெரிவித்து உள்ளார்.

விஜயபாரதம்



# உ.பி.அரசுக்கு வி.ஹெச்.பி. கடிதம்

விஜயபாரதம்

விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு, உத்தரபிரதேச மாநில சட்ட ஆணையத்திற்கு ஒரு கடிதம் எழுதியுள்ளது. அதில், மாநிலத்தில் மக்கள் தொகை கட்டுப்பாடு குறித்து உத்தேச வரைவு மசோதாவின் சில பகுதிகளை மாற்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**ஒரு குழந்தை கொள்கை:**

இந்த வரைவு மசோதா இரண்டு குழந்தைகள் கொள்கையை மேம்படுத்த பல நடவடிக்கைகளை முன்மொழிகிறது. அதே சமயம், இது ஒற்றைக் குழந்தைகளுடன் கூடிய தம்பதிகளை ஊக்குவிக்கிறது.

ஒரு குழந்தைக் கொள்கையை ஊக்குவிப்பதை விஷ்வ ஹிந்து பரிஷத் கடுமையாக எதிர்க்கிறது. ஒரு பெண்ணுக்கு சராசரியாக 2 க்கும் குறைவான குழந்தைகளை இலக்காகக் கொண்ட ஒரு கொள்கையை வகுப்பது, காலப்போக்கில் பெரிய அளவில் மக்கள் தொகை சுருங்க வழிவகுக்கும். இத்தகைய சுருக்கம் பல எதிர்மறையான சமூக மற்றும் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும்.

**சீன உதாரணம்:**

இந்த கொள்கை தவறானது என்பதற்கு சீனாவே சிறந்த உதாரணம். கடந்த 1980ல் ஒரு குழந்தை கொள்கையை சீனா நடைமுறைப்படுத்தியது. ஆனால் சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு, அதன் சமுதாயத் தாக்கத்தை உணர்ந்து அதனை திரும்பப் பெற்றுள்ளது.

**எதிர்மறை விளைவுகள்:**

உத்தரபிரதேசத்தைப் பொறுத்தவரையில், ஒரு குழந்தைக் கொள்கை வெவ்வேறு சமூகங்களிடையே ஏற்றத்தாழ்வை மேலும் அதிகரிக்க வழிவகுக்கும். குடும்பக் கட்டுப்பாடு மற்றும் கருத்தடை தொடர்பான ஊக்கத்தொகைகள், சலுகைகள் இதில் மாறுபாட்டை ஏற்படுத்தும்.

**அசாம் கேரளா:**

அசாம் மற்றும் கேரளாவில் உள்ள பல்வேறு சமூகங்களிடையே உள்ள மக்கள்தொகை பெருக்கம், ஏற்றத்தாழ்வுகள் மிகவும் அபாயகரமானது. அந்த இரு மாநிலங்களிலும், ஹிந்துக்களின் மொத்த கருவுறுதல் சதவீதம் (டி.எப்.ஆர்) 2.1 ஐ விட மிகவும் குறைந்துள்ளது. ஆனால் முஸ்லிம்களின் எண்ணிக்கை அசாமில் 3.16 ஆகவும், கேரளாவில் 2.33 ஆகவும் உள்ளது. இதன் விளைவாக, கேரளாவிலும் அசாமிலும் ஒரு சமூகம் சிறுபான்மையாக மாறும் அபாயக் கட்டத்தில் நுழைந்துள்ளது, மற்றொன்று மேலும் விரிவடைந்து கொண்டுள்ளது. எனவே, வருங்காலத்தில், அசாம், கேரளா போன்ற மாநிலங்களின் பிரச்சினைகளில் உத்தரபிரதேசம் சிக்கித் தவிப்பதை தவிர்க்க வேண்டும்.

மக்கள்தொகை கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துதல் மற்றும் இரண்டு குழந்தை விதிமுறைகளை மேம்படுத்துதல் என்ற இரட்டை நோக்கங்களுடன் இந்த மசோதா உடன்படுகிறது. ஆனால், மாநிலத்தின் குறிக்கோள்களை அடைய அது செல்ல வேண்டிய பாதையில் பயணிக்கவில்லை என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கஷ்டங்களுக்கு யார் காரணம் ?

நம்மை ஒருவர் துன்புறுத்தினால் அவர் மீது நாம் கடுங்கோவம் கொள்வது வழக்கம். ஆனால் அந்த கோவம் அர்த்தமற்றது. பிறர் நம்மை துன்புறுத்துவதற்கும் நாமே காரணம் என்கிறார் சீதை.



விஜயபாரதம்

சீதையை கடத்திய ராவனனை போர்புரிந்து வீழ்த்தினார் ராமர். இச்செய்தியை சீதையிடம் தெரிவிக்கஅனுமன் அசோகவனம் விரைந்தார். சீதையிடம் ராமனின் வெற்றியை கூறியவுடன் சீதை ஆனந்தம் கொண்டார்.

சந்தோஷமான செய்தியை கூறிய உனக்கு நான் ஏதேனும் வரம் தர விழைகிறேன். என்ன வரம் வேண்டும் கேள் ஆஞ்சிநேயா என்றார் சீதை. எனக்கு ஒருவரமும் வேண்டாம் தாயே. ஆனால் எனக்கொரு ஆசை. அதை நிறைவேற்ற நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்றார் அனுமன். என்ன ஆசை சொல் என்றார் சீதை.

உங்களை இங்கு பாடாய் படுத்திய அரக்கிகளைம் நான் இப்பொழுதே தீயில் இட்டு மடிய செய்ய விரும்புகிறேன் என்றார்.

சீதையின் முகம் மாறியது. நீ நினைப்பது தவறு அனுமன். அவர்கள் என்னை துன்புறுத்தியது உண்மைதான்; என்றாலும் அதற்கு காரணம் நான் தான். நான் செய்த சில கொடிய செயல்களின் பலனாகவே அந்த துன்பங்களை நான் அனுபவித்தேன் என்றார்.

நீங்கள் அப்படி என்ன கொடிய செயல்களை செய்தீர்கள் அன்னையே என்று அனுமன் வினவினார். நான் இங்கு வரும் முன்பு, பொன்மானாய் வந்த மாய மானை பிடித்து வரக்கூறி என் கணவரை அனுப்பினேன். அவர் நீண்ட நேரம் வராததாலும் லட்சுமணா என்று அபயக்குரல் எழுப்பியதாலும் நான் லட்சுமணனை சென்று அவரது அண்ணனை தேட சொன்னேன்.

ஆனால் அவரோ, அண்ணனிற்கு ஒன்று நேராது. நான் உங்களுக்கு காவலாக இங்கே இருப்பது முக்கியம் என்றார். ஆனால் நான் அவரை கடுஞ்சொற்களால் திட்டி விரைந்து செல்ல சொன்னேன்.

தன் கண்ணிமைபோல அவர் எங்களை பாதுகாத்தார். ஆனால் நான் அவரை அன்று என் வார்த்தைகளால் வருத்தமடைய செய்தேன். அதன் காரணமாகவே அரக்கிகள் என்னை துன்புறுத்தினர் என்றார் சீதை.

ஜெகன்

# வலையில் சிக்கிய மீம்கள்

அரிய வாய்ப்பு. ஒரு சில வீட்டு மனைகளே மீதம் உள்ளது. ஒரு வருடத்தில் விலை பல மடங்கு உயரும் !!



கொங்கு நாடு முதல்வர் அலுவலகம் அமையவிருக்கும் இடத்திலிருந்து 10 நிமிட பயணமே !



எதே !!! முதலமைச்சர் அலுவலகமா?! என்னடா சொல்ரீங்க!

நீட் தேர்வு ரத்து இல்லை
ஏழுபேர் விடுதலை இல்லை
பெட்ரோல்,டீசல் விலை குறைப்பு இல்லை
டாஸ்மாக் மூட சாத்தியமில்லை



இதத் தான் அந்த எடப்பாடியும் சொன்னாரு




விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006

## பரதன் பதில்

காங்கிரஸ் ஊழல்களைச் சொன்னால் மிரட்டப்படுகிறோம், மமதாவை பகைத்துக்கொண்டால் கொல்லப்படுகிறோம், தி.மு.க.வை விமர்சித்தால் வதைக்கப்படுகிறோம், ஆனால் மோடியை விமர்சித்தால் அவர் எதுவும் செய்வதில்லை, பின்னர் ஏன் அவரை சர்வாதிகாரி என்கின்றனர்.

- செல்வம், தேனி

அதுதானே ..... !?